# வல்வெட்டித்துறை

# அருள்மிகு ஆதி வைரவர் கோவில்

# மிகவும் பழமை வாய்ந்தது

யாழ்ப்பாணத்திலுள்ள வடமராட்சியில் அமைந்த வல்வை திருநகர் வானத்தரு நகரோ எனதக்கது. செல்வம் என்பது இங்கு பணத்தை மாத்திரம் குறிக்கவில்லை. கல்விச்செல்வம் என்பது போல எல்லா வளங்களையும் சுட்டும் அங்கு இல்லாதவை எவை? எல்லாம் உண்டு. எந்தப் பெருநகரும் இந்தத் திருநகருக்கு இணையாகாது. இன்றையது எந்திரலோகமாயினும் இது இந்திரலோகமாகவே திகழ்ந்தது. வருடாவருடம் இந்திரவிழா எடுப்பதால் மாத்திரம் இந்திரலோகம் அல்ல. எல்லாச் சிறப்புகளும் நிறையப் பெற்றது. எந்தச் சிறப்பாலும் குறைவற்றது. சிவசம்புப் புலவரின் **“ வல்வை கவித்துறை**” இதை அழகாக எடுத்தியம்பும் அவற்றை அங்கே காண்க.

நல்லூர் நல்லையானது போல வல்வெட்டித்துறை வல்வையானது ஆத்திகனுக்கு அரணானது நாத்திகனுக்கு முரணானது. சைவத்தில் நிற்பது சிவாகமங்களைக கற்பது சிவவழிபாடு பேணுவது தவநெறி பூணுவது இங்கே காட்சிதரும் ஓங்கியுயர்ந்த சிவன் கோவில், முத்துமாரியம்மன் கோவில், பிள்ளையார் கோவில், வைரவர் கோவில்கள் இதற்கு சாட்சி.

வைரவர் கோவில்களில் ஒன்று ஆதிவைரவர் கோவில். இது வல்வை நகரின் மேற்கு கரையில் காவலரணாக அமைந்துள்ளதுடன் இந்த இடத்திலேதான் முத்துமாரியம்மன் மூதாட்டி உருவத்தின் கோடிக்கரையிலிருந்து வந்து இறங்கியதாகவும் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றது. பொதுவாக இதை ஆதிகோவிலடி என்றே அழைப்பர். மிகவும் பழமை வாய்ந்தது எனக் கருதப்படுவது முத்துமாரி அம்மன் கோவில், ஐரோப்பிய வருகைக்கு முன்னமேயே இது இருந்திருக்கின்றது. இதற்கு ஆதாரங்கள் பல உள. ஐரோப்பிய ஆட்சி காலத்திற்கு முன் இலங்கையில் பதிவுமுறை ஏற்பட்டது என சரித்திரங்கள் கூறுகின்றன. பதிவுமுறை ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் வந்த புதியதொன்றல்ல. யாழ்ப்பாணத் தமிழ் அரசர் காலத்தில் அமைந்திருந்த நடைமுறை எனக் கூறுவர். எது எப்படியாயினும் தமிழரசர் காலத்துப் பதிவுகள் எமக்கு கிடைக்குமாறில்லை. ஐரோப்பியர் காலப்பகுதிகளில் அம்மன் கோவில் இடம் பெறுகின்றது. ஆதிகோவில் என்னுமிடத்து ‘‘ஆதி’’ என்ற சொல் என் கவனத்தை ஈர்க்கின்றது. வல்வையில் ஆதி தொட்டு இருந்து வந்த கோவிலோ எனக் கருத தோன்றுகின்றது. அம்மன் கோவிலுக்கு முந்திய பழமை உடையதாகலாம். அப்படியானால் ‘‘ஆதிகோவில்’’ என்றல்லவோ வந்திருக்கும். இலக்கண கட்டுப்பாடுகள் படித்தவர்களுக்கு பாமரர்களுக்கல்ல. பாமரர்களும் இலக்கண விதிகளை ஏற்படுத்துபவர்கள். ஆதிகோவில் என்றே வழங்கிவந்தார்கள். ஐரோப்பிய ஆட்சியாளர்கள் பதிவுகளில் ஆதிகேவில் இடம்பெற்றது ஏன்? ஆதிகோவில் சிறிய கோவிலாக இருந்துள்ளது. பதிந்தவர்களின் கண்ணுக்கும் கருத்துக்கும் படாதிருந்திருக்கலாம். ஆதிகோவிலடி மக்களும் பதிய வேண்டும் என்ற அக்கறை அற்றவர்களாக இருந்திருக்கலாம். எப்படியாயினும் ஆதிகோவில் அம்மன் கோவிலைப் போல பழமை வாய்ந்தது என்பதை மறுக்கமுடியாது.

நெல்லி நின்ற இடம் நெல்லியடியானது போல தாளை அதிகம் நின்ற இடம் தாளையடியானது போல ஆதிகோவில் அமைந்த இடம் ஆதிகோவிலடியாயிற்று. ஆதிகோவில் சிறு கொட்டிலாக

கோவிலாக இருந்தது. இருந்தாலும் மட்டிலா அருள்வளமுற்றது. கோவில் மிகப் பெரிய முதிர்ந்த நாவல் மரத்தின் கீழ் இருந்தது.

இவ்வூரவர்களுக்கு எல்லாமே வைரவர்தான். வைரவர் ஷேத்திர பாலகர் எனவும் பெயர் பெறுவர். இவர்களின் குலதெய்வம் அவர்தான். வழிபடு தெய்வமும் அவர்தான். காவற்தெய்வமும் அவர்தான். கடற்றொழிலுக்கு போவோர் திரவியந்தேடும் நோக்கோடு வியாபாரத்திற்குப் போவோர் வைரவரை வழிபட்டு நேர்ந்து விடைபெற்று செல்வர். சென்று மீண்டதும் தமது உழைப்பின் பெரும்பகுதியை வைரவருக்கு வழிபாடுகள் பூஜைகளை வெகுவிமரிசையாக இயற்றி மகிழ்வர்.

அக்காலத்து முக்கிய பிரையான சாதனம் மாட்டுவண்டி. கிழக்கு ஊருக்கும் வன்னிப் பிரதேசங்களுக்கும் உழைப்புக்கருதி மாட்டு வண்டிகளிற் செல்வர். கூட்டம் கூட்டமாகச் செல்வர். அது அவர்களுக்கு பலநாட் பயணம். பல இடங்களில் தரித்து களையாறிச் செல்ல வேண்டியிருக்கும். வண்டிக்காரரின் தரிப்புக்களிலே ஆதிகோவிலடிப் பிரதேசமும் ஒன்று. இங்கு தங்கி நீராடி நேர்த்திகள் வழிபாடுகள் செய்து பொங்கிப் படைத்து உண்டு களையாறிப் புறப்படுவர். மீளும் பொழுதும் இவ்விதம் செய்வர். சிவனே வைரவர் மூர்த்தங் கொண்டவர். திருமால் பிரமிற்கு ஏற்பட்ட அகந்தையை ஒழிப்பதற்காகவே இம் மூர்த்தங்கொள்ளப்பட்டது. ஐம்முகம் கொண்டிருந்த பிரம்மன் ஒருதலைக் கிள்ளப்பட்டான். நான்முகனானான். திருமால் வைரவரின் பிட்சாபாத்திரத்தைத் தன் குருதியால் நிரப்பப்பட முடியாதவராயினர். இருவரும் அகந்தை நீக்கப்பெற்றனர். அதன்பின்னர் வைரவர் மோனநிலையில் அமர்ந்துவிட்டார்.

மோனத்திலிருக்கும் வைரவரின் கொட்டில் இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன் கற்றளியாக்கப்பட்டது. மூலஸ்தானத்திற்கு கருங்கல் விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டது. இங்கு அர்ச்சகர்களாக பணிபுரிந்ததோர் கெருடாவிற் சைவக் குருக்கள்மார்கள். சில காலத்தின் பின்னர் மூல மூர்த்தியிற் சிறு ஊறு ஏற்பட்டதால் புது விக்கிரகம் ஒன்று பிரதிட்டை செய்யப்பட்டது. கடந்த சில வருடங்களாக சிவத்திரு.வே.பாலச்சந்திர குருக்கள் நித்ய பூசைகளைச் செய்து வருகிறார்.

ஊர் மக்கள் எல்லோரும் சேர்ந்து புனருத்தாரணம் செய்தனர். பழைய கட்டடம் அகற்றப்பட்டது. புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. கும்பாபிடேகம், மண்டலாபிசேகம், சங்காபிடேகம் எல்லா உரிய முறைப்படி நடைபெற்றன.

இது நடைபெற்றது சென்ற ரௌத்திரி வருடம் ஆவணி மாதம் ஆகும். (21.08.1987) அதன் பின்னர் திருவிழாக்கள் உரிய பக்கத்தில் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அலங்காரத் திருவிழாக்கள் பத்தாம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறும். ஊஞ்சல் நிகழ்ச்சியும் சிறப்பாக நடக்கும் இதனை தொடர்ந்து கற்பூரத் திருவிழாவுடன் உற்சவம் நிறைவு பெறுகின்றது.

இக்கோவிலானது 1987இல் கடந்த ஒப்பரேசன் லிபரேசன் பொழுது இலங்கை இராணுவத்தால் சேதப்படுத்தப்பட்டது. மீண்டும் 1991 ஜனவரிரியில் 4 நாட்கள் தொடர்ந்த விமானத் தாக்குதல்களால் மீண்டும் மிக மோசமாக பாதிப்புற்றது. எனினும் ஆண்டவனின் கோவில் கோவில் அவலமாக இருக்க பொறுக்காத மக்கள் அதனை மீண்டும் புதுப்பித்து திருவிழாக்களைக் தொடர்ந்து செய்து வருகின்றனர். இக் கோவிலின் நிர்வாகம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ''தேவஸ்தான பரிபாலன சபை'' யால் நிர்வாகிக்கப்படுகின்றது.

**இன்று 18.08.1992 கற்பூ ரத் திருவிழாவுடன் நிறைவு பெறும் உற்சவகாலத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**